## 28.37 சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் குறித்த கூடுதல் அதிகாரங்கள் அளிப்பது – உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் மீதான அரசின் ஆணைகள்

சுற்றுப்புறம் வனம் (வனம் 6) துறை

அரசாணை (நிலை) எண். 139 நாள் : 15.06.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 320, ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.01.97
2. அரசாணை (நிலை) எண் 100, ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.05.98
3. ஊரக வளர்ச்சித் துறையின் நேர்முக கடித எண், 14532 / சி4 / 99, நாள் 11.05.99

**ஆணை**

பார்வையில் ஒன்றில் கண்ட அரசாணையில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளுக்கு வனத்துறை மூலம் வளர்க்கப்பட்ட சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள், காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள் விறகு மற்றும் தீவனம் முதலானவைகளை மேம்படுத்த கூடுதல் அதிகாரங்கள் வழங்கலாமென பரிந்துரைகள் செய்துள்ளது. அவற்றை அரசு ஆய்வு செய்து, காப்புக்காடுகள் மற்றும் வன உயிரின் உய்விடங்கள் நீங்கலாக இதர பகுதிகளில் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து அதன்படி வனத்துறை செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

### 6. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

### கிராம ஊராட்சிகள்

பத்தி132 சமூகக்காடுகளையும், பண்ணைக்காடுகளையும் மேம்படுத்தவும் உயிரின வாழ்க்கையும் சுற்றுப்புறச் சூழலையும் மேம்படுத்தும் திட்டமாக சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் பராமரிப்பு பற்றி செய்தி பரவச் செய்தல் சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளுக்காக சமுதாய தரங்குறைந்த தரிசு நிலங்களை கண்டறிந்து, வளங்களைப் பாதுகாத்து செய்தி வெளியிடல் மற்றும் சமுதாய நிலங்களில் மரம் நடுதல் போன்ற திட்டங்களை வனத்துறையுடன் இணைந்து செய்யலாம்.

பத்தி 133 பங்கிடல் அடிப்படையில் ஆர்வமுள்ள தனியார் குழுவினருக்கு ஊராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடலாம் மற்றும் குத்தகைக் கட்டணங்களை வசூலிக்கலாம்.

பத்தி 134 சமூக மற்றும் பண்ணைக்காடுகள், மலைத் தோட்டக் கூழ்மரம், பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கட்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும், செடிகளையும் இலவசமாக வழங்குதல், மூங்கில் பண்ணைகளை அமைத்தல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், வனம் அல்லாத பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், சாலைகள் அமைத்தல், மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல், ஊரக வளர்ச்சித் துறையில் சமூகக் காடுகள் திட்டம், வேளாண்மைத் துறையின் தேசிய தரிசு நிலமேம்பாடு திட்டத்தின்கீழ் பண்ணைக்காடுகள் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிதல் ஆகியவற்றை வனத்துறையின் உதவியோடு செய்யலாம்.

பத்தி 135 வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய, மாநில உதவியுடன் வனமல்லாத தகுதிகளில் செயல்படுத்தப்படும் காடுகள் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தும் போது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அடங்கிய குழு அமைத்து தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட செயல்முறை போலவே அமுல்படுத்தலாம்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

பத்தி 136 சமூகக் காடுகளையும் பண்ணைக்காடுகளையும் மேம்படுத்துதல். உயிரின வாழ்க்கையையும் சுற்றுப்புற சூழலையும் மேம்படச் செய்ய சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக்காடுகளை மேம்படுத்தி, அதைப் பற்றிய செய்தி வனத்துறையின் உதவியுடன் பரவச் செய்யலாம்.

பத்தி 137 சமுதாயத்தில் தரம் குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து அவற்றில் இத்திட்டம் மேம்படச் செய்யவும், அரசாலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையாலும், அவ்வப்போது வழங்கும் பணிகளையும் செவ்வனே செய்யலாம். தேவையான வனத்துறையின் தொழில்நுட்ப அறிவுரையைப் பெற்று இப்பணியைச் செய்யலாம்.

பத்தி 138 எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரங்களைப் பற்றிக் கிராம மக்கள் அறியுமாறு செய்தி பரவச் செய்வதுடன் விற்பனைக்கும் ஏற்பாடு செய்யலாம். இப்பணியின் மூலம் மக்களை மரம் வளர்ப்பது குறித்து விழிப்புணர்வு மற்றும் மரக்கன்றுகள் விற்பனை செய்ய இயலும் மாவட்ட வாரியாக அமையவுள்ள வன விரிவாக்க மையங்களின் தொழில் நுட்ப உதவியைப் பெற்று செய்யலாம்.

பத்தி 139 தனது கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஊராட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் நாற்றுகளையும் மரக்கன்றுகளையும் வழங்க வனத்துறையின் தொழில் நுணுக்கங்களோடு இணைந்து நாற்றங்கால்கள் அமைக்கலாம்.

பத்தி 140 தமிழ்நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாட்டுத் திட்ட சமூகக்காடுகள், சூழலியல் மற்றும் சுற்றுப்புறச் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுகளை உருவாக்கலாம், மற்றும். அரிய மரவகை, ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்யலாம்.

பத்தி 141 ஊராட்சி ஒன்றியங்கள், சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

142 சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மாவட்டத்தின் செயல்திறத்தை வனத்துறையுடன் இணைத்து மதிப்பிடலாம்.

143 அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும். வனத்துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான தேவையான ஏற்பாடுகளையும், தயாரித்து அமுல்படுத்தலாம்..

144 நிதிகளுக்கு ஏற்பளித்து, ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப தீர்மானிக்கப்பட்ட சமூகக் காடுகள் திட்டங்களை தொகுத்தல் பணியை வனத்துறையின் உதவியுடன் செய்யலாம்

145 சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். வனத்துறையின் உதவியுடன் திட்டமிடலாம்.

146 அனைத்து சமூக மற்றும் பண்ணைக்காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக காலமுறையாக மூன்று மாதத்திற்கொருமுறையும் மற்றும் பண்ணைகளை அமைத்தல் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், ஊசியிலைக்காடுப் பயிர்கள், மரம் பளளளயிரிடுதல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் மற்றும் பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், வனச்சாலைகளை அமைத்தல் ஆகியவற்றை வனத்துறையின் முன் அனுமதி பெற்று ஆய்வு செய்யலாம்.

147 மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக்காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும், வாய்ப்பு வனங்களையும் பற்றி அரசுக்கு கருத்துரு அனுப்பலாம்.

## 7. காடுகளின் சிறு உற்பத்திப் பொருட்கள்

### கிராம ஊராட்சிகள்

148 பாதுகாக்கப்பட்ட காடுகள் வன உயிரின உய்விடங்கள், தேசியப் பூங்காக்கள் ஆகியவை தவிர மற்ற இடங்களில் சிறு வனப் பொருட்களை கிராமக் கைவினைஞர்கள் சேகரிப்பதற்கு, வனத்துறையினரை அணுகி, உரிமம் பெற்றுக் கொடுக்க கிராம ஊராட்சிகள் உதவலாம்.

149 அந்தந்தப் பகுதி வனத்துறையினரால் செயல்படுத்தப்படும். சிறுவன உற்பத்திப் பொருள் மேம்.பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிந்தம்., வனங்கள் பற்றிய நிபுனத்துவம். பெற்ற வனத்துறையின் மூலம். வாய்ப்புகளைக் கண்டறிந்து, மேற்படி திட்டத்தை வனத்துறையின் மூலம். செயல்படுத்தலாம்..

150 மருத்துவச் செடிகள் உள்ளிட்ட சிறு வன உற்பத்திப் பொருட்களை நடவு செய்ய தகுதியான நபர்களைக் கண்டறிந்து கிராம ஊராட்சிகள் செயல்படுத்தலாம்..

## 28. DEVOLUTION OF POWERS

### ஊராட்சி ஒன்றியங்கள்

151 வன உயிரின உய்விடங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் காப்புக்காட்டினைத் தவிர்த்து ஏனைய நிலங்களில் உராட்சி ஒன்றியங்கள், அந்தந்த ஒன்றியப் பகுதிகளில் சிறு வனப் பொருட்கள் தரும் காடுகளை ஏற்படுத்தவும், இருக்கின்ற காடுகளைப் பாதுகாத்து மேம்படுத்தவும் வழிவகைகள் செய்யலாம். சேகரிக்கப்படும் சிறு வனப் பொருட்களின் தரத்தை உயர்த்த தாமதமின்றி பதப்படுத்தவும் பதப்படுத்தப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்யலாம்.

152 காப்புக்காட்டினை தவிர்த்து ஏனைய நிலங்களில் சிறு வனப் பொருட்களை சேகரிப்பவர்களுக்கு சேகரிப்பு கட்டணங்கள் குறித்த நேரத்தில் கிடைப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவுதல்.

153 சிறு வனப் பொருட்கள் சேகரிக்கவும், பதப்படுத்தவும் மற்றும் விற்பனை செய்யவும் வனத்துறை மற்றும் பிற துறைகளால் (கிராமம் மற்றும் கைத்தொழில் துறை போன்றவை) செயல்படுத்தப்படும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம்.

154 சிறு வனப் பொருட்கள் தொடர்பான திட்டங்கள் மற்றும் திட்டம் சாராப் பணிகளை செயல்படுத்தலாம்.

155 காப்புக்காட்டினைத் தவிர்த்து சிறு வனப் பொருட்களான தேன், மரப்பட்டைகள், புளி, ஏலக்காய், மூங்கில் ஆகிய பொருட்களை முறைப்படுத்துதல் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிட்டுச் செயல்படுத்தலாம்.

156 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலவாழ்வுத்துறையின் துணைத் திட்டமான சிறு வன உற்பத்திப் பொருள் மேம்பாடு மற்றும் வளர்ச்சியை செயல்படுத்த ஊராட்சி ஒன்றியங்கள் உதவலாம். மேலும், அத்திட்டங்களை மேற்பார்வையிடலாம்.

### மாவட்ட ஊராட்சிகள்

157 மாவட்ட ஊராட்சி அமைப்புகள், சிறு வனப் பொருட்களை உற்பத்தி செய்தல், சேகரித்தல், பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள அமைப்பாளர்கள் பயன்படுத்துவோர் மற்றும் அலுவலர்களின் ஆண்டு மாநாட்டைக் கூட்டி நடைமுறையிலுள்ள செயல்பாடுகளின் திறனை மேம்படுத்தவும், பயன்படுத்துவோரின் தேவைகளை அறியவும், அரசின் மூலம் அதற்கான வழிவகைகளைக் கண்டறியவும் உதவலாம்.

158 உற்பத்தி செய்ப்பட்ட சிறு வனப்பொருட்களை கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான நிதியைத் திரட்ட கடன் தொடர்புகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இது தொடர்பான கருத்துக்களை கணித்து, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்கலாம்.

159 தேன், மரப்பட்டைகள், புளி, ஏலம், மூங்கில் போன்ற வனத்துறையின் சிறுவன உற்பத்திப் பொருட்களை முறைப்படுத்தி, திட்டமிடும் ஆய்வினையும் மற்றும் மருத்துவச் செடிகளின் உற்பத்தியை பெருக்க பரப்பளவை அதிகரிக்கும் திட்டத்தினையும் மேற்பார்வையிடலாம்.

### 12. விறகு மற்றும் தீவனம்
### கிராம ஊராட்சிகள்

221 கிராம மக்களின் தேவைக்கேற்ப எரிபொருள், மரங்கள் (விறகு), கால்நடைகளுக்குத் தேவையான தீவனப் பயிர் ஆகியவற்றை கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய நிலங்களில் வளர்க்க கால்நடை பராமரிப்பு/ வனத்துறைகளின் ஆலோசனையின்படி தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

222 தரிசு நிலங்களை தேர்வு செய்தல், தீவன மரங்கள், விறகு மரங்கள் போன்றவற்றை ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தில் வளர்க்க ஆலோசனை வழங்கலாம்.

223 புகையில்லா அடுப்புகள் மற்றும் சூரிய அடுப்பு போன்ற மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை பொதுமக்கள் பயன்படுத்த ஊக்குவிக்கலாம். இது போன்ற எரிபொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்தப் பயன்படுத்தக் கூடிய கருவிகளை இனங்கண்டு அவைகளை பெருவாரியாக பொதுமக்கள் பயன்படுத்த தேவையான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தலாம்.

224 வனத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் ஊரக எரிபொருள் மற்றும் விறகு மரங்கள் பயிரிடல் போன்ற பணிகளை வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையுடன் இணைத்து மேற்பார்வையிடலாம்.

225 கால்நடை பராமரிப்பு இணை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படும் தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்கு தேவையான தீவன மரச்செடிகள் தொட்டிச் செடிகள் வழங்குவதை மேற்பார்வையிடுதல் மற்றும் உதவிபுரிதல்.

226 ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் சாண எரிவாயு தேசிய வளர்ச்சித் திட்டம், ஊரக வளர்ச்சித் துறையின் சூளா தேசிய திட்டம் ஆகிய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட தேவையான உதவிகளை செய்து மேற்பார்வையிடலாம்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

227 எரிபொருளின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அவற்றின் உற்பத்தியை பெருக்கக்கூடிய இனங்களின்பால் தனிக்கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்புக்கு உட்பட்ட நிலத்தில் எரிபொருள் உற்பத்தியை பெருக்கலாம்.

228 தீவன உற்பத்தியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு மண்டல இணை இயக்குநர்/ உதவி இயக்குநர் ஆலோசனையின்பேரில் மரங்கள் மற்றும் மாட்டுத் தீவனம் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு நிலங்களை அடையாளம் கண்டு இதற்கென தனியே ஒதுக்கலாம்.

229 எரிபொருள் சிக்கனம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த மரபுசாரா அடுப்புகள் மற்றும் சூரிய சக்தி பயனால் இயங்கும் அடுப்புகளின் பயன்கள் பற்றி மக்களிடையே தனி விழிப்புணர்ச்சி ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

230 கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் மற்றும் மண்டல இணை இயக்குநர் பனத்துறை அலுவலர்கள் உதவியுடன் தீவனத்திற்கு பயன்படும் மரங்களை இனங்கண்டு பயிரிடலாம் மற்றும் நேரிடையாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

231 சமூக தரிசு நிலங்களில் பயிர் செய்யும் தீவன மரங்களின் உற்பத்தியில் நேரிடையாக ஈடுபட்டு மேற்பார்வையிடலாம்.

232 ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் தேசிய எரிவாயு திட்டம் சூளா அடுப்பிற்கான தேசிய திட்டம், தீவன எரிபொருள் முன்னேற்ற திட்டங்கள் போன்றவற்றை பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை ஊராட்சி ஒன்றியங்கள் வழங்கலாம்.

## மாவட்ட ஊராட்சிகள்

233 வனத்துறை செயல்படுத்தும் பல திட்டங்களில் ஊரக எரிபொருள் மற்றும் விறகு பயிரிடுதல் திட்டங்களில் மாவட்ட ஊராட்சி தனிக்கவனம் செலுத்தலாம். இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து திட்டமிடலாம்.

234 மாவட்ட ஊராட்சி பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களில் கால்நடை தீவன மரங்களை வளர்த்து தீவன உற்பத்தியைப் பெருக்கலாம். இது போன்ற பணிகளை மாவட்ட ஊராட்சிகள் திட்டமிடலாம்.

235 கால்நடை பராமரிப்பு இயக்குநர், தலைமையில் செயல்படும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பெரிய அளவில் கால்நடை தீவன உற்பத்தியைப் பெருக்க தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

236 தீவன பயிர்கள் மற்றும் நாற்று விநியோகிக்கும் திட்டத்தினை செயல்படுத்த திட்டங்கள் தயார் செய்து, செயல்படுத்தி மேற்றார்வை செய்யலாம். தேசிய தரிசு நில மேம்பாட்டு வாரியத்தின் நிதி உதவி பெற்று வனத்துறை தீவன மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துகிறது. அத்துறையுடன் இணைந்து மாவட்ட ஊராட்சி இது போன்ற திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்தி மேற்பார்வை செய்யலாம்.

## 28. DEVOLUTION OF POWERS

237 ஊரக வளர்ச்சி துறையின் மூலம் மரபுசாரர எரிசக்தியை பயன்படுத்தி சாண எரிவாயு திட்டம் மற்றும் தேசிய சூளா திட்டம், சூரிய அடுப்பு போன்றவை நிறைவேற்றப்படுகிறது. மாவட்ட ஊராட்சிகள் இது போன்ற செயல்பாட்டுக்கு திட்டம் வகுத்து செயல்பாட்டை ஆய்வு செய்யலாம்.

2. மேற்கண்ட அரசின் முடிவுகளை வனத்துறை அதிகாரிகள்/ அலுவலர்களுக்கும் அனைத்து கிராம ஊராட்சிகள்/ ஊராட்சி ஒன்றியங்கள்/ மாவட்ட ஊராட்சிகளுக்கும் தெரிவித்து அவற்றின்படி செயல்படுத் தக்க வகையில் அறிவுரைகள் வழங்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்/ ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

2. மேற்கண்ட அரசின் முடிவுகளை வனத்துறை அதிகாரிகள் / அலுவலர்களுக்கும் அனைத்து கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகளுக்கும் தெரிவித்து அவற்றின்படி செயல்படத்தக்க வகையில் அறிவுரைகள் வழங்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் / ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.எஸ்.ஸ்ரீபதி**
அரசு செயலாளர்